பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 86

வியாழக்கிழமை
20 பெப்ரவரி 2025

மாசி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## கிளிநொச்சியில் இன்று போர்

யாழ்ப்பாணம், பெப். 20
வலிந்து காணாமலாக்கப் பட்ட உறவுகளுக்கு நீதி கோரி, கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக இன்று போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக காணாமலாக் 11

கொழும்பு - புதுக்கடை

# நீதிமன்றத்துக்குள் வைத்து ஒருவர் சுட்டுப் படுகொலை!

## சினிமாப் பாணியில் துணிகரச் சம்பவம்
## கொலையாளி புத்தளத்தில் கைது



கொழும்பு, பெப்ரவரி 20

இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் ஆயுதக்குழுத் தலைவரான கனேமுல்ல சஞ்ஜீவ, கொழும்பு - புதுக்கொடை நீதிமன்றத்துக்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். 11

## சட்டப் புத்தகத்துக்குள் கடத்தப்பட்ட துப்பாக்கி



கொழும்பு, பெப். 20
கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்கான துப்பாக்கி, சட்டப்புத்தகத்துக்குள் மறைக்கப்பட்டே நீதிமன்றத்துக்குள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 11

நீதிமன்ற துப்பாக்கிச்சூடு

## கொமாண்டோவே கொலையாளி!



கொழும்பு, பெப். 20
கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் வைத்து, நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுப் படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் இலங்கை இராணுவத்தின் கொமாண்டோ படைப்பிரிவின் முன்னாள் சிப்பாயென 11

## சட்டத்தரணிகளுக்கு இனிச் சோதனை!

கொழும்பு, பெப். 20
எதிர்வரும் காலங்களில் நீதிமன்ற வளாகத்தில் வைத்து சட்டத்தரணிகளும் இனி சோதனைக்குட் 11




'கறுப்புக்கோர்ட் போட்டு கறுப்பாடு ஒண்டு சுடுமெண்டு ஒருத்தரும் கனவும் கண்டிராயினம் கண்டியளோ'

## செம்மணி மனித எச்சங்களை பார்வையிடவுள்ளார் நீதிவான்!

யாழ்ப்பாணம், பெப். 20
அரியாலை செம்மணியில் அமைந்துள்ள சிந்துபாத்தி மயானத்தில் அண்மையில் மீட்கப்பட்ட மனித எச்சங்களை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி இன்று நேரில் பார்வையிடவுள்ளார்.
யாழ்ப்பாணம் 11

தையிட்டிப் போராட்டம்

## கஜேந்திரன், வேலன் சுவாமிக்கு விசாரணைக்காக அழைப்பாணை

யாழ்ப்பாணம், பெப். 20
தையிட்டிப் போராட்டம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் வேலன் சுவாமிகள் ஆகிய இருவரும் இன்று 11

மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

## பலாலி பொலிஸுக்கு எதிராக முறைப்பாடு!

யாழ்ப்பாணம், பெப். 20
பலாலிப் பொலிஸாருக்கு எதிராக, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியப் பணிமனையில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. 11




மக்கள் மனச்சாட்சியின் தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 19.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3994 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 01 05 57 71 |
| விசேட எழுத்து | K |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 19.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1061 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 27 48 53 56 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 19.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0020 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 1 9 6 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 19.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2100 |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 10 |
| வெற்றி இலக்கங்கள் | 05 27 33 78 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 19.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5752 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 3 2 0 2 7 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 19.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1782 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 06 07 08 39 |
| விசேட எழுத்து | M |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 19.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 327 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 0 2 7 3 |

# மலியும் படுகொலைகள் சட்டம், ஒழுங்கு எங்கே?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

**கொழும்பு, பெப். 20**

**நீதிமன்றத்துக்குக்கூட நபரொருவர் பாதுகாப்பாகச் செல்ல முடியவில்லையெனில், அது பாரதூரமான விடயமாகும். குழந்தைகள்கூட கொல்லப்படுகின்றனர். நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு வலுவான கட்டமைப்பு எங்கே? இந்த நிலைமைக்கு முடிவு கட்டவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.**



கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு தொடர்பில் பிரச்சினை எழுந்துள்ளது. நாளாந்தம் படுகொலைகள் இடம்பெறுகின்றன. குழந்தைகள்கூட கொல்லப்படுகின்றன. எனவே, சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வலுவானதொரு தீர்வுப் பொறிமுறை அவசியம். அதற்கு நாமும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயார். நீதிமன்றத்துக்குக்கூட மரண பீதியுடன்தான் செல்ல வேண்டியுள்ளதெனில் அது பாரதூரமான பிரச்சினையாகும்.

இந்த நிலைமைக்கு முடிவு கட்ட வேண்டும்.

எனவே, சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக எடுக்கப்படவேண்டிய வலுவான தீர்மானங்களை எடுக்கவேண்டும். இதற்காக எமது தரப்பில் இருந்து வழங்கப்படவேண்டிய முழுமையான ஆதரவு வழங்கப்படும்." என்றார். (ச-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 19.02.2025 | புதன்கிழமை | 0460 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| N | 0 7 0 0 5 6 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.02.2025 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2726 | N | 02 34 45 48 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.02.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| V | 09 29 49 73 | 4887 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.02.2025 | புதன்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 16 27 29 60 | 4438 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 19.02.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 28 | 06 09 58 62 | 1902 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.02.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| T | 02 09 14 43 | 2552 |

| JAYODA DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.02.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| W | 14 18 49 62 | 2105 |



# முன்னுதாரணமாக கடற்றொழில் அமைச்சர்

யாழ்ப்பாணம், பெப். 20

கண் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய கண் மருத்துவமனைக்குச் சென்ற கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் நெடுநேரம் வரிசையில் காத்திருந்து தனக்குரிய இலக்கம் வந்தபிறகு மருத்துவரைச் சந்தித்து சிகிச்சை பெற்றுள்ளார்.

அமைச்சராக இருந்தபோதிலும் தனக்கான அதிகாரத்தைப் பயன்படுத்தாது, ஏனைய நோயாளிகளுடன் வரிசையில் நின்று அவர் சிகிச்சை பெற்றுள்ளார் என்பது முன்னுதாரண செயற்பாடென அங்கிருந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது. (ச-125)

# மீத்தெனியாவில் துப்பாக்கிச்சூடு

## தந்தை, மகள், மகன் பலி

கொழும்பு, பெப்.20

மீத்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஆணொருவரும், அவரது ஆறு வயதுடைய மகள் மற்றும் 9 வயதுடைய மகன் ஆகியோரும் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10.15 மணியளவில் நடந்துள்ளது.

தனது மகன் மற்றும் மகளுடன் மோட்டார் சைக்களில் பயணித்த 39 வயதுடைய குறித்த நபர் மீது அடையாளம் தெரியாத குழுவினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதில் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அவரது மகனும், மகளும் எம்பிலிப்பிட்டிய மற்றும் தங்காலை மருத்துவமனைகளில் பலத்த காயங்களுடன் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# கதிரைச் சின்னத்தில் சுதந்திரக்கட்சி களம்

கொழும்பு, பெப்.20

உள்ளூராட்சித் தேர்தலில் தமது கட்சி கதிரைச் சின்னத்தில் போட்டியிடும் என சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# பயங்கரவாதத் தாக்குதல் இலங்கையில் நடக்கலாம்

## பிரிட்டன் எச்சரிக்கை



கொழும்பு, பெப். 20

இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படலாம் எனவும் தமது நாட்டுப் பிரஜைகள் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் பிரிட்டன் எச்சரித்துள்ளது.

பலஸ்தீனப் பிராந்தியத்தில் இஸ்ரேலின் இருப்புக் காரணமாக சர்வதேசரீதியில் பதற்றம் அதிகரித்துள்ளது. அல்கைதா, டேஷ் போன்ற அமைப்புகள் தாக்குதலை மேற்கொள்ளுமாறு தமது ஆதரவு அமைப்புகளிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

யூதர்கள், முஸ்லிம்கள், இஸ்ரேலுக்குச் சார்பானவர்களை இலக்குவைத்து முன்னெச்சரிக்கையின்றியே தனி நபர்கள் மூலம் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம். எனவே பிரித்தானியப் பிரஜைகளை பொதுமக்கள் கூடுமிடங்களில் அவதானமாக நடந்துகொள்ளுமாறும், உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நடக்குமாறும் பிரித்தானிய வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவின் பட்ஜெட்டில் கிழக்கு புறக்கணிப்பு!

## ஹிஸ்புல்லாஹ் குற்றச்சாட்டு

**கொழும்பு, பெப்.20**

**போரால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணம் தேசிய மக்கள் சக்தியின் வரவு செலவுத் திட்டத்தில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு என எந்தவொரு விசேட நிதியும் ஒதுக்கப்படவில்லை. வடக்கு மாகாணத்துக்குப் பெரியளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வடக்கு மாகாணத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டமையை வரவேற்கின்றோம். அதேபோன்று கிழக்கு மாகாணமும் போரால் பாதிக்கப்பட்ட மாகாணமாகும். மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் மாகாணம். அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் வீதிகள், பாலங்கள், பாடசாலைக் கட்டடங்கள் அழிவடைந்திருக்கின்றன. அவற்றை மீளக்கட்டியெழுப்ப எந்தவொரு நிதியும் இதுவரை ஒதுக்கப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் கட்டடங்கள், வீதிகள், மீன்பிடித் துறைமுகம், பல்கலைக்கழகம் எனப் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செய்யவேண்டியுள்ளது.

கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு வரவு -செலவுத் திட்ட அறிக்கையில் ஒதுக்கப்படாவிட்டாலும் அரசாங்கத்தின் மூலதன நிதியில் இருந்து அதன்பின்னரும் ஒதுக்கீடு செய்யமுடியும்- என்றார். (எ-இ)



## பாடசாலை தரமுயர்வு

மன்னார், பெப். 20

இரணை இலுப்பைக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, தரம் 1 சி பாடசாலையாக நேற்றுப்புதன் கிழமை உத்தியோபூர்வமாகத் தரமுயர்த்தப்பட்டதுடன் உயர்தர வகுப்பும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வில் விருந்தினர்களாக வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், மடுக் கல்வி வலயப் பணிப்பாளர், மடுப் பிரதேச செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25, 110)

### தென்மராட்சி வலயத்தில்


## தவணைப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் இலவசம்

யாழ்ப்பாணம், பெப். 20

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கான தவணைப்பரீட்சை வினாத்தாள்களை வலயக்கல்வி அலுவலகத்திலேயே அச்சிட்டு இலவசமாக வழங்கவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தெரிவித்துள்ளார்.

ஆரம்பித்துள்ள கல்வி ஆண்டின் முதலாம் தவணைக்குரிய வினாத்தாள்கள் பதிப்பு, முதற்கட்டமாக கல்வி அபிவிருத்திப்பிரிவு பிரதிக்கல்விப் பதிப்பாளரின் மேற்பார்வையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொடர்ச்சியாக ஒவ்வொரு தவணைக்குமான வினாத்தாள்கள் அச்சிடப்பட்டு இலவசமாக வழங்கப்படவுள்ளன. இதற்காகத் தன்னார்வுத் தொண்டு அமைப்புகளிடம் உதவியைக் கோரியுள்ளோம். இதுவரை காலமும் தவணைப்பரீட்சைக்கென்று மாணவர்களிடம் ஒவ்வொரு வலயத்திலும் பணம் அறவிடப்பட்டுவந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25, 28)



### கண்டியில்

## 168 அபிவிருத்தித் திட்டங்கள்

கொழும்பு, பெப்.20

கண்டி நகரை மையமாகக் கொண்ட 168 அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

2035ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கண்டி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று அதிகாரசபையின் தலைவர் பொறியியலாளர் குமுது லால் தெரிவித்துள்ளார். (எ-இ)

## இந்திய மீனவர்கள் பிரச்சினை; தீர்வு தந்தால் ரூ.1000 கோடி

யாழ்ப்பாணம், பெப். 20

இந்திய மீனவர் அத்துமீறல் பிரச்சினை தீர்க்கப்பட்டால் வடக்கிலிருந்து ஜனாதிபதிக்கு 1000 கோடி ரூபா வழங்குவதற்கு தாம் தயார் என அகில இலங்கை கடற்றொழில் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று சொல்லப்பட்ட நிலையில் இதுவரை தீர்க்கப்படவில்லை.

தற்போது நாடாளுமன்றத்தில் வாசிக்கப்பட்ட பாதீட்டில் கடற்றொழிலாளர்களுக்கு என எந்தவித ஒதுக்கீடும் வழங்கப்படவில்லை. எனவே கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்கவேண்டும்- என்றார். (ப-126)




தென்னையில தேள் கொட்டினால் பனையில நெறிகட்டின கதையா மாறிப்போட்டுது என்.ஜீ.ஓ.காரர்களுக்கு. ஆனால் உந்தக் கோதாரி விழுந்த ட்ரம்ப் , அமெரிக்க ஜனாதிபதியா வந்ததும் வராததுமா செய்த வேலை யு.எஸ்.எய்ட் அமைப்பின்ர எல்லா வேலையையும் நிப்பாட்டினதுதான். "யு.எஸ். எய்ட்டில ஊழல், மோசடி நடக்குது, அதால ஓடிட் பண்ணிப்போட்டுத்தான் அந்த அமைப்பு தொடர்ந்து இயங்கலாமோ, இல்லையோ எண்டதைப்பற்றி முடிவெடுப்பம்" எண்டு வெட்டு ஒண்டு, துண்டு ரண்டா ட்ரம்ப் போட்ட உத்தரவால யு.எஸ்.எய்ட் அமைப்பே அப்பிடியே உறைஞ்சுபோட்டுது. அதில வேலை செய்த எல்லாரையும் உடனேயே ட்ரம்ப் வேலையை விட்டுத் தூக்கி, வீட்டுக்கு அனுப்பிப்போட்டார். அதுக்குப் பிறகு அந்த அமைப்பிட்ட "ஏன் உதவியை நிப்பாட்டினீங்கள்?" எண்டு கேக்கக்சுட ஒப்பீஸில ஒருத்தரும் இல்லை.

உண்மையில இந்த அமைப்பை ட்ரம்ப் குறிவைச்சதுக்குக் காரணம் அங்க ஊழல், மோசடி நடந்ததெண்டதுக்காக இல்லை. அமெரிக்காவே இப்ப பொருளாதாரத்தில அடிவாங்கிக்கொண்டிருக்கேக்க அளவுகணக்கில்லாத காசு இப்பிடி யு.எஸ்.எய்ட். அமைப்புக்கால வேற நாடுகளுக்கு வீணாப்போகுது எண்டு அங்கத்தை ஆக்கள் கடுப்பில இருக்கினம். அதால இதுதான் சாட்டெண்டு அந்த அமைப்புக்கு ஊழல், மோசடி முத்திரையைக் குத்தி முடக்கிப்போட்டார் ட்ரம்ப்.

செம்மனச்செல்வியிட்ட புட்டும், சம்பலும் வாங்கி மூக்குமுட்டத் திண்டுபோட்டு படுத்திருந்த சிவபெருமானுக்கு பாண்டியன் அடிச்ச அடி எப்பிடி எல்லாரின்ர முதுகிலும் விழுந்திச்சோ, அப்பிடி ட்ரம்ப் அமெரிக்காவில யு.எஸ்.எய்ட்.அமைப்பை முடக்கினதால இஞ்ச கனபேர் வேலையில்லாமல் அல்லாடவேண்டி வந்திட்டுது. இலங்கையில உள்ள தொண்டு நிறுவனக்காரர் (என்.ஜீ.ஓ)எல்லாமே யு.எஸ்.எய்ட். அமைப்பின்ர உதவியை நம்பித்தான் இயங்குகினம். அவையின்ர ஒவ்வொரு திட்டங்களுக்கும் இணைப்பாளர், ப்ரொஜெக்ட் மனேச்சர், பீல்ட் ஒப்பீஸர், ஒப்பீஸ் கிளார்க் எண்டு கனபேர் வேலை செய்தவை. எல்லாருக்கும் ஏசி ரூமுக்குள்ள வேலை, கைநிறையச் சம்பளம், வாகனம் எண்டு நல்ல வசதி. ஆனால் ட்ரம்ப் செய்த வேலையால எல்லாமே ஒரேநாளில தலைகீழா மாறிட்டுது.

யு.எஸ்.எய்ட் காசு அனுப்பிறதை நிப்பாட்டினதால இஞ்சையுள்ள என்.ஜி.ஓ எல்லாம் தங்கட வேலைத்திட்டங்களையும் அப்பிடியே அந்தரத்தில கையை விட்டிட்டு, வேலை செய்த ஆக்களையும் வீட்ட போகச் சொல்லிட்டினம். இப்பிடி மின்னாமல் முழங்காமல் திடீரெண்டு போகச்சொன்னால் அவையள் என்ன செய்வினம்? முந்தியெண்டாலும் ஒரு என்.ஜி.ஓ.வில வேலை இல்லாட்டி இன்னொரு என்.ஜி.ஓ.வுக்கு போகலாம். இப்ப ட்ரம்ப் செய்த வேலையால எல்லா என்.ஜி.ஓ.வும் வேலை செய்தவையை வீட்ட அனுப்பினால் அவை எங்கதான் போறது எண்டு தெரியாமல் முழிக்கினம். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா எண்டு வடக்கில மட்டும் கிட்டத்தட்ட முன்னூறு பேருக்குக் கிட்ட இப்பிடி வேலையில்லாமல் நிக்கினமெண்டு தகவல். பிறத்தியாரின்ர கையை நம்பி இருந்தா இப்பிடித்தான் அந்தரப்படவேண்டியிருக்கும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான காரியங்களிலும் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த நல்ல தகவல் ஒன்று கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சக ஊழியர்கள் இணக்கமாக நடந்துகொள்வார்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு சகோதர வகையில் எதிர் பாராத ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும். அலுவலகப் பணிகளில் மிகவும் கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். அலுவல கத்தில் எதிர்பார்த்த சலுகை இழுபறிக்குப் பிறகு கிடைக்கும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினை ஏற்பட்டு விலகும்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. விசேடங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சியைத் தவிர்க்கவும். தடை, தாமதம் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த சுபச் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் சக ஊழியர்களின் விஷயங்களில் தலையிடவேண்டாம்.

**விருச்சிகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளை சமாளித்து விடுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர்ச் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மகரம்:** எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகத்தில் மிகவும் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**கும்பம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும்வாய்ப்பும் சிலருக்குஏற்படக்கூடும். பயணத்தின்போது கொண்டுசெல்லும் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.

# வடக்கு மீனவர்கள் சீனாவின் பகடையல்ல!

## யாழ். மாவட்ட மீனவர் சம்மேளனம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 20
இந்திய அத்துமீறிய இழுவைமடிப் படகுகளால் வடக்கு மீனவர்கள் பாதிக்கப்பட்டுவரும் நிலையில் அதனைப் பயன்படுத்தி இந்திய தேசியப் பாதுகாப்புக்கு சீனா அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மைப் பயன்படுத்துவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம் என யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளின் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தியாவின் அத்துமீறிய இழுவைமடிப் படகுகளால் தொடர்ச்சியாக நாம் பாதிக்கப்பட்டு வருகின்றமை உண்மையே. ஆனால் சீனா எமக்கு உதவி செய்கிறோம் எனக் கூறி எமது கடல் பிராந்தியத்தில் இந்திய தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மைப் பயன்படுத்த முனைவதை ஏற்கமாட்டோம்.

இந்தியா எமது அயல் நாடு. அது மாத்திரமல்ல எமது தொப்புள்கொடி உறவு என்ற ரீதியில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக எமது கடலைப் பயன்படுத்த அனுமதிக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-20,27)



பண்டிதர் ச.வே பஞ்சாட்சரத்தின் உரும்பையம்பதி பேய்ச்சியம்மன் திருவந்தாதி நூல்வெளியீட்டு விழா இணுவில் அறிவாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் த. ஜெயசீலன் நூலை வெளியிட்டு வைக்க, பேராசிரியர் ச. முகுந்தன் வெளியீட்டுரையை ஆற்றினார். (ச-25)

## பனிப்புலத்தில் கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 20
பனிப்புலம் பகுதியில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். வீதிச்சோதனை நடவடிக்கையின்போதே சுழிபுரம் காட்டுபுலம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் கசிப்புடன் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. சந்தேகநபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

## மெய்வல்லுநர் போட்டி


கொடிகாமம், பெப்.20
நாவற்குழி மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் மு.ஜெகதாசன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக இளைஞர் சேவை அலுவலர் இ.அனுரதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-159)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், பெப்.20
தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரின் ஏற்பாட்டில், குருதிக் கொடை முகாம், தெல்லிப்பழையில் அமைந்துள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை இடம் பெறவுள்ளது.
குருதிக்கொடையாளர்கள் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-25,66)

## கடலாமை இறைச்சியுடன் யாழில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 20
குருநகர் இறால் வளர்ப்புத் திட்டம் பகுதியில் உயிருள்ள கடலாமை ஒன்று மற்றும் 20 கிலோ எடையுடைய கடலாமை இறைச்சி ஆகியவற்றுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக, யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-22, 26 27,20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

நீங்கள் கண்டிப்பாகக் கொண்டிருக்கவேண்டிய மிக முக்கியமான விடயம் பொறுமையே.


– ஜாக் மா –

## படுகுழிக்குள் பாதுகாப்பு!

**கொ**ழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். பாதாள உலகக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்புடைய நபரொருவர், கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வழக்கு விசாரணைகளுக்காக அழைத்து வரப்பட்ட நிலையிலேயே, நீதிமன்றத்துக்குள் வைத்து இந்தத்துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இலங்கையில் அண்மைக்காலமாக சட்டமும் ஒழுங்கும் மிகவும் மோசமான வகையில் சீர்குலைந்துள்ளன என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகவே இந்தத் துப்பாக்கிச்சூடு அமைந்துள்ளது. துப்பாக்கிச்சூடுகளும், ஆயுதக் கலாசாரமும் இன்று உலகப் பொதுவான விடயங்களாக மாறிவிட்டன. உலகில் எந்தவொரு நாடும் இதில் விதிவிலக்கில்லை. ஆனால், நீதிமன்றத்துக்குள் வைத்தும், நீதிமன்ற வளாகங்களுக்கு அருகில் வைத்தும் இடம்பெறும் படுகொலைகள் பாரதூரமான பிரச்சினை. இதில் எந்த மழுப்பல்களுக்கும், சமாளிப்பு களுக்கும் கிஞ்சித்தும் இடமில்லை. அரசாங்கம் தேசியப் பாதுகாப்பு விடயத்தில் தனது தோல்வியை ஏற்க வேண்டிய விடயமாகவும் இது அமைந்திருக்கின்றது.

சில வாரங்களுக்கு முன்னர், மன்னார் நீதிமன்றத்தில் வைத்தும் வழக்கொன்றுக்காக வருகை தந்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் உயிரிழந்திருந்தனர். இந்த விடயம் தேசிய அளவில் பல்வேறு பாதுகாப்புக் கரிசனைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில்தான் தற்போது கொழும்பிலும் அதேபோன்றதொரு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மன்னார் துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னரும்கூட நீதிமன்றங்களின் பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் எந்தவொரு முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் மேற் கொள்ளவில்லை என்ற பதிலையும் புதுக்கடை நீதிமன்றில் நேற்று இடம்பெற்ற படுகொலை வழங்கியிருக்கின்றது.

நீதிமன்றங்களுக்குள் வைத்து நடத்தப்பட்ட இரண்டு தாக்குதல்களும் நீண்ட குற்றப்பின்னணி உடைய விடயங்கள். ஆதலால், அந்த விடயங்கள் தொடர்பான புலன் விசாரணைகளை மிக இலகுவில் மேற்கொண்டிருக்க வேண்டும். அத்துடன், 24 மணிநேரக் கண்காணிப்பைச் செலுத்தியிருக்க வேண்டிய விடயங்களாகவும் அவை அமைந்துள்ளன. எனவே, இந்த விடயத்தில் எங்கு தொடர்ச்சியாகத் தவறு இடம்பெறுகின்றது என்ற பரிசீலனையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அத்துடன், அரசு என்ற ரீதியிலும், திணைக்களங்கள் என்ற ரீதியிலும் சம்பவத்துக்குப் பொறுப்பேற்கவும் முன்வரவேண்டும். எந்தவொரு நாட்டில் நீதிமன்றமும், நாடாளுமன்றமும் அவற்றின் கண்ணியத்தை இழக்கின்றனவோ, அந்த நாடு அழிவின் திசை நோக்கியே பயணிக்கும். எனவே, ஒரு நாட்டின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டுமாயின், சர்வதேச நன்மதிப்பைப் பெறவேண்டுமாயின், நாடாளுமன்றத்தினதும், நீதிமன்றத்தினதும் பாதுகாப்பு முதலில் உறுதிப்படுத்தப்படவேண்டும்.






### தனியார் துறை
## சம்பள உயர்வுக்கு சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, பெப்.20

**த**னியார்துறை சேவையாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை அதிகரிக்கும் வகையில் சட்டம் திருத்தம் செய்யப்படும். தனியார் துறையில் அடிப்படைச் சம்பளம் 21 ஆயிரத்தில் இருந்து 30 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வர்த்தகம், உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க வரவு செலவுத் திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டில் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் தனியார் துறையில் அங்கம் வகிக்கிறார்கள். இவர்களில் 60 சதவீதமானோரின் அடிப்படைச் சம்பளம் 21 ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகிறது. தனியார் சேவை வழங்குநர்கள் மற்றும் முதலாளிகளுடனான பேச்சில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை 27 ஆயிரம் ரூபாவாகவும், 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. -என்றார். (எ-இ)

## சத்திரசிகிச்சை காத்திருப்பை துரிதப்படுத்த குழு நியமனம்

கொழும்பு, பெப். 20

அரச மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சைகளுக்காக நீண்டகாலமாகக் காத்திருக்கும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் எடுக்கக்கூடிய சாத்தியமான நடவடிக்கைகளை ஆராய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

இந்தக் குழு ஒரு மாதத்துக்குள் குறித்த விவகாரம் குறித்து அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளது . (ச)

## வடக்கில் 15,320 பிறப்புகள் கடந்த வருடத்தில் பதிவு!

யாழ்ப்பாணம், பெப். 20

வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் 15 ஆயிரத்து 320 பிறப்புகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கமைவாக வடக்கு வலயப் பிரதிப் பதிவாளர் பிரபாகர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அதேவேளை 8 ஆயிரத்து 200 இறப்புகள் கடந்த வருடம் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)




## அணையாடைகளுக்கு 1.4 பில்லியன் ரூபா

கொழும்பு, பெப்.20

பாடசாலை மாணவிகளுக்கான சுகாதார அணையாடைகளுக்காக 1.4 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கௌசல்யா நவரத்ன தெரிவித்துள்ளார். மாணவிகள் தமது கற்றலை சிறந்த முறையில் மேற்கொள்ள இது உதவுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25, 6)

## கடவுச்சீட்டு விநியோகம் இனி 24 மணிநேர சேவை

கடவுச்சீட்டு விநியோகத்துக்காக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் நேற்றுமுதல் வாரத்தின் 7 நாள்களிலும் 24 மணிநேரமும் இயங்கும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். அதன்படி, கொழும்பு, பத்தரமுல்லைக்கு விசேட பஸ் சேவை இரவுவேளைகளில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நூலகத்தை எரித்தவர்களை கண்டுபிடித்து தண்டனை வழங்குக

## செல்வம் எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், பெப்.20

யாழ். நூலகத்தை எரித்தவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்காக விசாரணைக்குழுவொன்றை அமைக்கவேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற பாதீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் இந்த வேண்டு கோளை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். நூலக மேம்பாட்டுக்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத் தின் பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள் ளது. அதற்காக நன்றி தெரிவிக் கின்றேன்.

ஆசியாவிலேயே முதன்மை இடத் தைப்பெற்ற யாழ். நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் இன்னும் ஆறாத வடுவாக உள்ளது. எனவே, நூலகத்தை எரித்தவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு விசாரணைக்குழுவை அமைக்க வேண்டும். இதனைச் செய்தவர் கள் இப்போதும் நடமாடிக்கொண் டிருக்கின்றார்கள். எனவே, தண் டனையைப் பெற்றுக்கொடுப்பதற் குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். யாழ்ப்பாணம் கல்வி யில் மேலோங்கி இருந்த ஒரு மாவட்டம்.

யாழ்ப்பாணம் என்றால் கல்வி மான்கள் சிறந்து விளங்கிய மாவட்டம். இன்று பின்தங்கிய நிலையில் இருப்பதற்கு நூலக எரிப்புச் சம்பவமும் ஒரு காரணம் - என்றார். (ச-44)

# கனியமணல் அகழ்வை தடுக்காவிடின் போராட்டம்

## ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு


மன்னார், பெப். 20

மன்னார்த்தீவில் மக்களின் விருப்பமின்றி கனியமணல் அகழ்வுக்கான களஆய்வுகள் இடம்பெற்றால், மக்கள் திரண்டு மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய நிலைமை தோன்றும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார்த்தீவு மிகவும் குறுகிய தாழ்வான நிலப்பகுதியாகும். கடல்நீர் மட்டத்திலிருந்து தாழ்வான நிலப்பகுதி என்பதால் மழைக்கா லத்தில் நீர் வழிந்தோடமுடியாமல் பொதுமக் கள் தொடர்ந்தும் இடம்பெயரவேண்டிய துர்ப் பாக்கிய நிலையில் உள்ளனர்.

மன்னார்த்தீவில் மூன்று மாடிகளுக்குமேல் கட்டடங்களை அமைப்பதற்கு நகரஅபிவிருத்தி அதிகாரசபை அனுமதி வழங்குவதில்லை. ஆகவே இப்பகுதியில் கனியமணல் அகழ்வ தென்பது மிகவும் பாரதூரமான விளைவு களை ஏற்படுத்தும். எனவே மன்னாரில் கனியமணல் அகழ்வைத் தடுக்கவேண்டும். இல்லையேல் களேபரம் ஏற்படலாம்- என்றார் (ச- 25, 213, 246)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனை பிரிட் டன் தூதுவர் ஆண்ட்ரூ பட்ரிக் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் வடக்கின் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்து கலந்து ரையாடப்பட்டன. (ச-125)

# வேறுபட்ட விலையில் நாட்டரிசி விற்பனை

யாழ்ப்பாணம், பெப்.20

நாட்டரிசியின் விலை இடத்துக்கு இடம் மாறுபட்ட விலையில் விற்பனை செய்யப்படுகின்றது என்று நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டும் நாட்டரிசியின் விலை குறையவில்லை. பத்துக் கிலோ அரிசி 2600 ரூபா முதல் 2750 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

எனவே அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை உரிய தரப்பி னர் விதிக்க வேண்டும் என்றும் நுகர்வோர் கோரிக்கை விடுத் துள்ளனர். (ச-41-17)

# சீசன் டிக்கெற் பயணிகளை பஸ்களில் ஏற்றமறுத்தால் கடுமையான நடவடிக்கை

கொழும்பு, பெப். 20

மாதாந்த பருவகாலச் சீட்டை வைத்திருக் கின்ற பாடசாலை மாணவர்கள், தொழில்நுட் பக் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பிறநபர்கள் ஆகி யோரை இலங்கைப் போக்குவரத்துச் சபைக் குச் சொந்தமான பஸ்களில் ஏற்றிச் செல் வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

யாரேனும் ஊழியர் ஒருவர் பருவகாலச் சீட்டை வைத்திருப்பவர்களை ஏற்றிச்செல்ல மறுத்தால், அது இலங்கைப் போக்குவரத் துச்சபைக் கொள்கையின்படி கடுமையான குற்றமாகும். அவ்வாறான பஸ் ஊழியர்க ளுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. பருவகாலச்சீட்டை வைத்திருப் பவர்கள் அசௌகரியங்களை எதிர்கொண் டால் 1958 என்ற எண்ணை அழைத்து முறையிடலாம் என்றும் இலங்கைப் போக் குவரத்துச்சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

# அதிபர், ஆசிரியர்களின்றி சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தி.

## பெற்றோர் விசனம்

யாழ்ப்பாணம், பெப். 20

சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தி யாசாலையில் அதிபர், ஆசிரியர் கள் வெற்றிடம் நீண்டகாலம் நிரப் பப்படாது காணப்படுவதால் மாணவர்களின் கல்விச் செயற் பாடு பாதிப்புக்குள்ளாகின்றது என்று பெற்றோர் விசனம் தெரி வித்துள்ளனர்.

230 வரையிலான மாணவர்கள் கல்விகற்கும் குறித்த பாடசாலை யில் மீள்குடியேறிய மாணவர்கள் உட்பட பல பின்தங்கிய பிரதேசங் களைச் சேர்ந்த மாணவர்களும் கல்வி கற்கின்றனர்.

கடந்த மூன்று வருடங்களாக ஆங் கில ஆசிரியர், வகுப்பு ஆசிரியர் ஆகியோருக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. குறித்த பாடசாலையின் அதிபரும் கடந்த இரண்டு வாரங்களின் முன் இடமாற்றலாகிச் சென்றுள்ளார். அந்த வெற்றிடமும் மீள்நிரப்பப் படவில்லை.

கிராமப்புறப் பாடசாலைகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் நிலையில் பிறிதொரு அதிபர் ஒரு வரை நியமிக்காது கடமையாற் றிய அதிபர் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

எனவே வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினர், வடக்குமாகாண ஆளுநர் ஆகியோர் இது தொடர் பில் கரிசனை கொண்டு மாணவர் களின் கல்விச் செயற்பாட்டை பாதிக்காத வண்ணம் ஆசிரியர், அதிபர் வெற்றிடங்களை உடன் நிரப்பவேண்டும்- என்றும் பெற் றோர் வேண்டுகோள் விடுத்துள்ள னர். (ச-125)

# மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ். உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தி யாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திற னாய்வுப்போட்டி பாடசாலை முதல்வர் திருமதி செந்தினி ஜெயக்குமார் தலைமை யில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உதவிக்கல்வி ஆசிரிய ஆலோ சகர் ந.ஸ்ரீ.முருகதாஸ்காந்தன், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய வர்த்தக ஆசிரிய ஆலோசகரும் பாடசாலை மேம்பாட்டுத்திட்ட வலயப் பிரதிநிதியுமான திருமதி சிவலோஜினி சிவகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-159)

# இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.20

தேர்தல் கண்காணிப்புப் பணிச் செயற்பாட்டா ளர் அமரர் சிறீதரன் சபாநாயகத்தின் மூன்றா வது மாத நினைவேந்தல் நிகழ்வும், இரத்த தான நிகழ்வும் எதிர்வரும் பெப்ரவரி 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணி முதல் அரி யாலை நெடுங்குளம் சந்தியிலுள்ள சர்வோதய அமைப்பின் தலைமையகத்தில் இடம்பெறவுள் ளன.

நிகழ்வில் முன்னாள் தேர்தல் ஆணையாளர் முகமட் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் சிறந்த உள்ளூராட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், இலவச சட்ட உதவி தேவைப் படுவோருக்கான சட்ட ஆலோசனைகள் வழங் குதல் தொடர்பான கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது. (ச-41-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச அபிவிருத்தி வங்கி உருவாக்கம்

# அநுர சொன்னதை செய்தால் வெட்டியெறிவேன் காதை!

## கபில் ஹாசிம் எம்.பி. சவால்

கொழும்பு, பெப். 20

ஜனாதிபதி அநுர வரவு செலவுத்திட்ட உரையில் கூறியதுபோல் இந்த வருட இறுதிக்குள் அரச அபிவிருத்தி வங்கியை உருவாக்கினால் எனது காதை வெட்டி எறியத் தயார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

அரச அபிவிருத்தி வங்கியை உருவாக்குவது இலகுவான விடயமல்ல. இந்த வங்கியை ஆரம்பிப்பதற்குரிய ஆரம்பகட்ட நடவடிக்கைகளைக்கூட அரசாங்கம் இன்னும் தொடங்கவில்லை என்றும் கபீர் ஹாசிம் மேலும் கூறியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, 'நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தனது நாக்கைத்தான் வெட்டி எறிய வேண்டும். அரசாங்கம் ஏற்கனவே 50 பில்லியனை அரச அபிவிருத்தி வங்கிக்கென ஒதுக்கியுள்ளது. பயனாளிகளாக 15 ஆயிரம் விவசாயிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்' - என்று தெரிவித்தார். (ம-6)


## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS

### Procurement of Electrical& Electronic Goods & Office equipment

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, Works as specified following Tables.
01) Electrical & Electronic Goods & Office equipment
Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements
01) Bidders shall have valid business registration
02) Bidders shal! have Manufacturer Authorization for their goods.

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Contact No (021 2222278/4557 ), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a non-refundable fee as specified in the table by cash on working days from 20.02.2025 to 04.03.2025 during 09.00 Hours to 15.00 Hours.

E. Bids must be delivered to Chirman „Regional procurement Committee, Regional Director of Health Service, Health Village, Pannai, Jaffna on or before 10.00 AM of 05.03.2025 to the address given below in the tender box available at the Room of Procurement Management (PM). Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118days from the bid opening.

G. Pre bid meeting Will be on 27.02.2025at10.00amAt RDHS Office Jaffna

H. Procurement committee will be the right to make final decision in regard the accept or reject Bids.

Table - 1

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security | Bid Security Validity period |
|---|---|---|---|---|---|
| NP/RDHS/PSDG/2025/EE/01 | Supply & Installation of Air conditioner 18000BTU | 14 | 2,000.00 | 62,000.00 | Till 30.06.2025 |
| | Supply & Installation of Air conditioner 24000BTU | 11 | | | |
| | Supply & Installation of Air conditioner 36000BTU | 01 | | | |
| | Supply & Installation of Air conditioner 48000BTU | 01 | | | |
| NP/RDHS/PSDG/2025/EE/02 | Refrigerator(double door) | 06 | 2,000.00 | 16,000.00 | Till 30.06.2025 |
| | Television 55" | 04 | | | |
| NP/RDHS/PSDG/2025/OE/03 | Photocopier | 04 | 2,000.00 | 24,000.00 | Till 30.06.2025 |
| | Multimedia Projector | 02 | | | |
| | Laminating Machine | 01 | | | |
| | Scanner | 03 | | | |
| | Colour Printer (Ink tank) | 02 | | | |
| | Job Identity Card Printer | 01 | | | |
| NP/RDHS/PSDG/2025/OE/04 | Desktop Computer | 24 | 2,000.00 | 55,000.00 | Till 30.06.2025 |
| | UPS | 42 | | | |
| | Tablet | 01 | | | |
| NP/RDHS/PSDG/2025/OE/05 | Office table | 16 | 2,000.00 | 14,900.00 | Till 30.06.2025 |
| | Computer table | 04 | | | |
| | Revolving Chair | 17 | | | |
| | Steel Almeriah | 14 | | | |
| | Front Glass Almeriah | 04 | | | |
| | Plastic Arm Chair | 77 | | | |
| NP/RDHS/PSDG/2025/OE/06 | Dining Table (6 Persons) | 06 | 2,000.00 | 17,000.00 | Till 30.06.2025 |
| | Dining Chair | 50 | | | |
| | Conference table -40 seats | 01 | | | |
| | Conference Table -09 seats | 01 | | | |
| | Conference Table -12 seats | 01 | | | |
| | Conference chair | 63 | | | |

Chairman -Regional Procurement committee
RDHS Office, Jaffna.

(CR/44362) J-1



## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 24. 5ம் குறுக்குத் தெரு, 10 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எலிசம் இராஜசிங்கம் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் இல-23/2, 5ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லப்பா இரத்தினமும் பெண் காந்திமதியும் இவ்வாதனம் முப்பத்தைந்து (35) வருடங்களாக தமது ஆட்சிக்குட்பட்டது என்றும் அதற்கத்தாட்சியாக சமாதான நீதவான் திரு.பா.அமிர்தநாயகம் முன்பாக 26.09.1987ல் விரிவான சத்தியக்கூற்றுப் பத்திரம் நிறைவேற்றியதாக கூறி 19.11.1997ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 9244ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் அதேயிடத்தைச் சேர்ந்த தமது மகளான செல்வி. அனுஷியா இரத்தினத்திற்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் இல-23/2. 5ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த. இரத்தினம் மகள் அனுஷியா 03.11.2004ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயச்சித்ரா சிறிதரன் முகதாவில் 62ம் இலக்க நன்கொடை உறுதி மூலம். தனது பெற்றோரான செல்லப்பா இரத்தினமும் பெண் காந்திமதிக்கும் வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை இல-23/2. 5ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லப்பா இரத்தினமும் பெண் காந்திமதியும் 04.11.2004ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்ரா சிறிதரன் முகதாவில் 63ம் இலக்க சீதன உறுதி மூலம் தமது மகளான சாமித்தம்பி ஞானசெல்வம் பெண் அனுஷியாவுக்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், சுண்டிக்குளி கோவிற்பற்று, கறையூர் இறை. யாழ்ப்பாணம் மாநகர சபை. 4ம் வட்டாரத்தில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் சி.இரத்தினசிங்கம் அவர்களினால் 28.11.1985ம் திகதியில் அளந்து வரைந்த 260ம் இலக்க நில அளவைப்படத்தின் படி குளி ஆறு தசம் இரண்டு(குளி 6.2) விஸ்தீரணம் கொண்டதுமான காணியும் கல்வீடும் பயிர்வகைகளும். இதற்கு எல்லைகள்:-

கிழக்கு :- எலிசம் இராஜசிங்கத்தின் உரிமைக்காரரின் ஆதனம்.
வடக்கு :- செல்லப்பா இராஜதுரையும் பெண் சொர்னம்மாவினதும் குத்தகைக் காணி.
மேற்கு : றோட்டு
தெற்கு :- அருளப்பு பிலிப்பையாவும் பெண் சற்குணத்தினதும் குத்தகைக் காணி இதடங்களும்.

தற்போது ஞானசெல்வம் பெண் அனுஷியா இவ்வாதனத்தைத் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது ஞானசெல்வம் பெண் அனுஷியா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மாநகர ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை.**

(CR/44361) J-1



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 04.04.1959 — உதிர்வு 15.03.2023

### அமரர் வேலாயுதம் கருணாகரன்

(ஓய்வு பெற்ற பொருளியல் ஆசான்)

திதி : மாசி மாத அபரபக்க அட்டமி

அன்பின் ஊற்றாக
ஆளுமையின் சிகரமாக
பாசத்தின் பிறப்பிடமாக
எமையெல்லாம் வழிகாட்டி
ஆளாக்கிய தெய்வம்
மின்னாமல் முழங்காமல்
சாயிபாபாவின் பாதார விந்தங்களை
அடைந்து ஈராண்டு ஆனதுவோ
ஓம் சாந்தி

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரன், சகோதரிகள்

(CS/29817) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 24 • 11 • 1939



மறைவு 22 • 01 • 2025

கடந்த 22.01.2025 அன்று இறைபதமடைந்த
எமது அன்புத் தாயார்

## அப்புத்துரை செல்லம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.02.2025) வெள்ளிக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். தொடர்ந்து 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் சுதுமலை குபேரமஹால் மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வேளையில், எமது அன்புத் தாயார் சுகவீனமுற்றிருந்த காலத்தில் மிகுந்த சிரத்தையுடன் உன்னதமான சிகிச்சையளித்த யாழ் போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் மற்றும் ஏனைய வைத்தியர்கள். குறிப்பாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் வைத்திய குழுவினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். மற்றும் எமது தாயாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாக வருகை தந்தோர். தொலைபேசி மற்றும் முகநூல் வழியாக அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

(CR/44360) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 • 12 • 1945



மறைவு 16 • 02 • 2025

## கிட்ணர் சுப்பையா

யாழ். கோவிலாக்கண்டி மேற்கு வேலன்பிராயைப் பிறப்பிடமாகவும், சிவப்பிரகாசம் வீதி அரசடி சந்தி நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்ணர் சுப்பையா அவர்கள் கடந்த 16.02.2025 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சரவணன் கிட்ணர் - பஞ்சவர்ணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியர், பாலசிங்கம் - இராஜேஸ்வரி தம்பதியர் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் கௌரி ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசம்மா, மற்றும் மனோன்மணி, லக்ஸ்சுமி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, முத்துலிங்கம் மற்றும் கந்தையா (செல்லத்துரை), காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சதீஸ்வரன் (சுவிஸ்), சஜீவா (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), சந்திரரூபன் (ஜேர்மனி), சஜீவன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராஜா (ஜேர்மனி), ரமேஸ்குமார் (ஜேர்மனி), நந்தினி (சுவிஸ்), சுமித்திரா (ஜேர்மனி), சுயித்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சயிவிதா, கிந்துஜன், கயானிகா (சுவிஸ்), தனுசியன், சயானிகா (ஜேர்மனி), டிலக்சனா, பாலகணேஸ், கிசோதிகா (ஜேர்மனி), நிசோக், நிபேஸ், நிகாஸ் (ஜேர்மனி), பிரீத்திகா, பிரவீன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (20.02.2025) வியாழக்கிழமை மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

சதீஸ் - மகன் - +41 798 321 959, சிவராஜா - மருமகன் - +49 157 528 74352
சந்திரரூபன் - மகன் - +49 152 157 15087, சஜீவன் - மகன் - +49 157 581 59035
ரேனுஜன் - உறவினர் - +94 7666 24951, அகிலன் - உறவினர் - +94 766 846 982

(CS/57545) J-1

# மரண அறிவித்தல்



## தெய்வேந்திரன் அருந்தவநாயகி (தவம்)

யாழ்ப்பாணம் பிரவுண்வீதியைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வதிவிடமாகவும், தற்போது இராமலிங்கம் வீதி, திருநெல்வேலியை வாழ்விடமாகவும் கொண்ட தெய்வேந்திரன் அருந்தவநாயகி (தவம்) அவர்கள் கடந்த (15.02.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருலோகசுந்தரம் - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை தெய்வேந்திரனின் அன்பு மனைவியும், சுந்தரராஜன் (சொக்கன் - திருநெல்வேலி), சௌவுந்தரராஜன் (ராசன் - கனடா), சுந்தரநாயகி ( கனடா), அருந்ததி (கனடா), நாகலஷ்மி ( கனடா), சுந்தரேசன் (கனடா), மனோகரி (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகராணி (லக்கி - திருநெல்வேலி), வரதலஷ்மி (கனடா), மகேந்திரன் (கனடா), மகாதயா ( கனடா ), ஈஸ்வரசுப்பிரமணியம் (கனடா), பிரியா (கனடா), சிவானந்தன் (கனடா), கந்தசாமி, பஞ்சலிங்கம், இராஜேஸ்வரன், செல்வராசா, சண்முகநாதன் சிவகுமார், யோகமலர் ஆகியோரின் மைத்துனியும், சிந்து, சிவதர்சி, பிரியங்கா, சுமித்தா, பார்த்தீபன் ஆகியோரின் அன்பு மாமியும், சிவரஜியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2025) வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல் வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 12.11.1954 மறைவு 15.02.2025

107, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 190 6532**

(CS/57549) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதானியின் வெளியேற்றத்தால் அரசாங்கத்துக்கு வருத்தமில்லை

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.20**

**இலங்கையில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை அதானி குழுமம் கைவிட்டதால் எந்த வருத்தமும் இல்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கடந்த திங்கட்கிழமை வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றும்போது, அதானியின் பெயரைக் குறிப்பிடாமல் ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையிலிருந்து முதலீட்டாளர் ஒருவர் வெளியேறிவிட்டார் என்று எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன. ஒரு யுனிட் மின்சாரம் குறைந்த விலைக்குக் கிடைக்கும் வகையில், 50 மெகாவோட் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்கு இலங்கை அரசு ஒப்பந்தம் செய்தது. அப்படி இருக்கும்போது அதைவிட ஒன்றரை மடங்கு அதிக விலை கொண்ட மின் உற்பத்தித் திட்டம் ஏற்கப்படுவதை நியாயப்படுத்த முடியாது. அந்தத் திட்டம் கைவிடப்பட்டதால் இலங்கைக்கு எந்த வருத்தமும் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## பிரதமரின் யாழ்.வருகையில் காற்றில் பறந்த விதிமுறை!

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்.மாவட்டத்தில் அதிக ஒலிகளை எழுப்புபவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் கட்டுப்பாட்டுவிதிகள் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் அண்மையில் பிரதமர் யாழ்ப்பாணம் வருகைதந்தபோது அந்த விதிமுறைகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சுற்றாடல் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலும் வலி.மேற்குப் பிரதேசசபையினாலும் ஒலிக் கட்டுப்பாடு தொடர்பில் அறிவுறுத்தப்பட்டதுடன் அதுதொடர்பில் சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் அண்மையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் சுழிபுரம் வழக்கம்பரையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது வீதிகளில் ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு அதிக ஒலி எழுப்பப்பட்டுள்ளது.

இதுகுறித்து அரச திணைக்களத்தினர் அனைவரும் சமமான முறையில் கட்டுப்பாடுகளை விதித்து முன்னுதாரணமாகச் செயற்படும்போதே மக்களும் அவ்வாறு விதிமுறைகளைப் பின்பற்றுவர் என்று பிரதேசமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-125)

# ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப இவ்வாண்டுக்குள் நடவடிக்கை!

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, பெப்.20

நாடளாவிய ரீதியில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த வருடத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரம் ஆசிரியர் கலாசாலைகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களுக்கும் இந்த வருடத்திற்குள் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கல்வி உயர்கல்வி அமைச்சரும், பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஷாமர சம்பத் தசநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தேசிய பாடசாலைகளிலிருந்து மேலதிகமாக காணப்படும் ஆசிரியர்களை மாகாணப் பாடசாலைகளுக்கும் மாகாண பாடசாலைகளில் மேலதிகமாகக் காணப்படும் ஆசிரியர்களை தேசிய பாடசாலைகளுக்கும் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் நீதிமன்றத்தில் அது தொடர்பான வழக்கு ஒன்று தாக்கல்செய்யப்பட்ட நிலையில் அதுநிறுத்தப்பட்டிருந்தது. எனினும் பின்னர் கிடைத்த நீதிமன்ற தீர்ப்பையடுத்து மீண்டும் அதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த வருட இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வரும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கனியமணல் அகழ்வு

# மக்களின் எதிர்ப்பையடுத்து கைவிடப்பட்ட களப்பயணம்



மன்னார், பெப். 20
மன்னார் கொன்னையன் குடியிருப்புப் பகுதியில் கனிய மணல் அகழ்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையொன்று பொதுமக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து கைவிடப்பட்டுள்ளது.

மன்னாரில் கனிய மணல் அகழ்வு தொடர்பான ஆய்வுப் பணிகள் பொதுமக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து இரண்டு தடவைகள் கைவிடப்பட்டிருந்தன. இந்த நிலையில், கனிய மணல் அகழ்வுக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் கடந்த திங்கட்கிழமை தடை பெற்றுக் கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து நேற்றையதினம் சுமார் 23 திணைக்களங்களின் அதிகாரிகள் மாவட்டச் செயலகத்துக்குக் கட்டம் கட்டமாக வருகை தந்தனர். அங்கிருந்து பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்புடன், அவர்கள் களப் பயணம் மேற்கொண்ட நிலையில், மக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. (ம-56)



# தினக்குரல் பத்திரிகையின் ஸ்தாபகர் சாமி மறைந்தார்

யாழ்ப்பாணம், பெப். 20
பிரபல தொழிலதிபரும் தினக்குரல் பத்திரிகையின் ஸ்தாபகருமான எஸ்.பி.சாமி (வயது 89) நேற்றுக் காலமானார்.

வயது மூப்பின் காரணமாக அவர் காலமானதை அவருடைய குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர். சமூக மற்றும் சமயப் பணிகளில் எஸ்.பி.சாமி ஈடுபாடுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## INVITATION FOR BID 2025/01
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 5 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, health village pannai Jaffna. (T.P:021 222 2278, Fax: 021 222 9971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | From 20.02.2025 until 04.03.2025 |
|---|---|---|
| | Pre-Bid Conference | At 2.30 P.M on 27.02.2025 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 05.03.2025 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| NP/04/41/2025/PSDG/W/01 | Renovation of OPD Block at DH Kondavil | 4.16 | 98Days | C8 (Buildings) | 3,500.00 | 42,000.00 | Till 21.05.2025 |
| NP/04/41/2025/PSDG/W/02 | Renovation of Kitchen and Dental unit at DH Kondavil | 3.18 | 90Days | C8 (Buildings) | 3,500.00 | 32,000.00 | Till 21.05.2025 |
| NP/04/41/2025/PSDG/W/03 | Renovation of Mortuary at DH Valvettithurai | 2.25 | 81Days | C8 (Buildings) | 3,500.00 | 23,000.00 | Till 21.05.2025 |
| NP/04/41/2025/PSDG/W/04 | Renovation of Clinic Complex Valvettithurai | 4.15 | 98Days | C8 (Buildings) | 3,500.00 | 42,000.00 | Till 21.05.2025 |
| NP/04/41/2025/PSDG/W/05 | Improvement works of ward at DH Valvettithurai | 2.68 | 85Days | C8 (Buildings) | 3,500.00 | 27,000.00 | Till 21.05.2025 |

Chairman
Regional Procurement Committee
Regional Directorate of Health Service, Jaffna.
(CR/44364) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வாசுகிக்கு பொலிஸார் அழைப்பாணை

யாழ்ப்பாணம், பெப். 20
தையிட்டி திஸ்ஸ விகாரைக்கெதிரான போராட்டத்தில் பங்குபற்றியமை தொடர்பான விசாரணைகளுக்கு வருகைதருமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியின் செயற்பாட்டாளர் திருமதி வாசுகி சுதாகரனுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

நேற்றுப் புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரது வீட்டிற்குச் சென்ற பலாலிப் பொலிஸார் விசாரணைக்கான அழைப்புக் கடிதத்தைக் கையளித்துச் சென்றுள்ளனர். (ம-66)

# திருக்கேதீஸ்வர சிவராத்திரி முன்னாயத்த நடவடிக்கை!

மன்னார், பெப். 20
மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு மாவட்டச் செயலர் தலைமையில் நேற்று முன்னாயத்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

திருக்கேதீஸ்வர ஆலய சம்பந்தர் மண்டபத்தில் நேற்றுக் காலை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் தலைவர் ராமகிருஷ்ணன், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகள், பொலிஸார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சிவராத்திரியை முன்னிட்டு இம்முறை லட்சக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், மேம்படுத்தப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ம-56)

# குருதிக்கொடை முகாம்

பளை, பெப். 20
பளை பிரதேச மருத்துவமனையின் ஏற்பாட்டில், குருதிக்கொடை நிகழ்வு மருத்துவமனை மண்டபத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. பிரதேச குருதிக்கொடையாளர்கள் கலந்து கொண்டு உயிர் காக்கும் பணிக்கு உதவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச- 25, 9)

# நாட்டின் பாதுகாப்பு அதலபாதாளத்தில்!

## நாமல் ராஜபக்ச கடும்பிடி

கொழும்பு, பெப். 20

நாட்டின் தேசியப் பாதுகாப்பு படுகுழிக்குள் தள்ளப்பட்டுள்ளது. மன்னாரில் நீதிமன்றத்துக்கு வெளியில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இன்று நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறிருந்தால் எப்படி முதலீட்டாளர்கள் வருவார்கள்? என்று நாமல் ராஜபக்ச விமர்சித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:-

தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் பிரச்சினையில்லை என அமைச்சர் ஒருவர் நேற்று (நேற்றுமுன்தினம்) கூறினார். ஆனால் நேற்றிரவும், இன்றும் இரு துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நீதிமன்றத்துக்கு உள்ளேயே சென்று, நீதிபதி முன்னிலையிலேயே படுகொலை இடம்பெற்றுள்ளது. நாட்டு மக்களின் பாதுகாப்புக்கு பிரச்சினை இல்லை என அரசாங்கம் ஒரு புறத்தில் கூறினாலும், மறுபுறத்தில் பட்டப்பகலில் படுகொலைகள் இடம்பெறுகின்றன.

மன்னாரில் நீதிமன்றத்துக்கு வெளியிலும், கொழும்பில் நீதிமன்றத்துக்கு உள்ளேயும் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளது. இப்படி நடந்தால் வெளிநாட்டுமுதலீடுகளைக்கொண்டுவர முடியுமா? சுற்றுலாத்துறையிலும் இது தாக்கத்தை ஏற்படுத்தும். இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

முதலீட்டாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். நாட்டு மக்களின் பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தினால்தான் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருவார்கள் - என்றார். (அ-ம-44)

### நீதிமன்றத்துக்குள்...

சட்டத்தரணிபோல் வேடமிட்டுவந்த துப்பாக்கிதாரியொருவரே, நீதிமன்றத்துக்குள் வைத்து இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார். நீதிமன்றக் கூண்டுக்குள் வைத்தே கனேமுல்ல சஞ்ஜீவ மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2009ஆம் ஆண்டுமுதல் பாதாளக் குழுக்களுடன் நெருக்கமாக இயங்கி வந்த கனேமுல்ல சஞ்ஜீவ 30க்கும் மேற்பட்ட கொலைக்குற்றங்களுடன் தொடர்புடையவர் என்றும் போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு படகுமூலம் தப்பிச்சென்ற அவர், அங்கிருந்து நேபாளம் சென்றிருந்தார். பின்னர் போலியான கடவுச்சீட்டு மூலம் இலங்கைக்கு வந்தநிலையில் கடந்த செப்ரெம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டு பூசாச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் வழக்கு விசாரணைக்காக விசேட பாதுகாப்புடன் அவர் நேற்று நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டார். புதுக்கடை நீதிமன்ற வளாகத்தின் 5ஆம் இலக்க நீதிமன்ற கட்டடத்தொகுதியில் நீதிமன்றக் கூண்டில் வைத்தே அவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

சட்டத்தரணிபோல் வேடமிட்டுவந்த நபரே துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு, துப்பாக்கியையும் சம்பவ இடத்திலேயே போட்டுவிட்டு தப்பியோடியுள்ளார். இதனையடுத்து கனேமுல்ல சஞ்ஜீவ கொழும்பு தேசிய மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

தாக்குதலை நடத்திய சந்தேகநபர் நேற்றுமாலை புத்தளம் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ-ம-44)

### செம்மணி...

செம்மணியில் மீட்கப்பட்ட மண்டையோடு உள்ளிட்ட மனித எச்சங்கள் 1995, 1996ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்றும், எனவே இது தொடர்பில் விசாரண்ணகள் இடம்பெற வேண்டும் எனவும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றவிசாரணைப் பிரிவில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவரும் நிலையிலேயே, மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி இன்று சம்பவ இடத்தைப் பார்வையிடவுள்ளார். (அ-ம-26-66)

### கஜேந்திரன்,...

விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அழைப்பாணைக் கடிதம் நேற்றுப் புதன்கிழமை பலாலிப் பொலிஸாரால் இருவரிடமும் நேரடியாகக் கையளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பலாலி பொலிஸ் நிலையத்துக்கு நண்பகல் 12 மணியளவில் விசாரணைக்காக வருமாறு அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் மீளவும் கையளிக்குமாறு கோரி ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களின் ஏற்பாட்டில் கடந்தவாரம் தையிட்டியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டம் தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காகவே இருவருக்கும் அழைப்பாணைக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-26-66-125)

### பலாலி...

தையிட்டி விகாரைக்கு எதிராக தம்மால் மேற்கொள்ளப்பட்ட நியாயமாக போராட்டத்துக்காக, பொலிஸார் பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்று குறிப்பிட்டே செல்வராசா கஜேந்திரானால் இந்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. ஜனநாயக அரசியல் உரிமைகளுக்கு அச்சுறுத்தல் விடுத்து மௌனமாக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் பலாலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நயனகித்தின் திட்டமிட்ட விசாரணை நடவடிக்கைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் கவனத்தில் கொள்ளவும் தலையிடவும் வேண்டும் என்று முறைப்பாட்டாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் கோரியுள்ளார்.

(அ-ம-26-66)

### கொமாண்டோவே...

தெரியவந்துள்ளது. சொகுசு வாகனமொன்றில் குறித்த நபர் தப்பிச்சென்றுகொண்டிருக்கையிலேயே புத்தளம் பாலாவி பகுதியில் வைத்து மடக்கிபிடிக்கப்பட்டுள்ளார். விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த கூட்டுத் தேடுதல் நடவடிக்கையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொஹமட் அஸ்மான் செரீப்டீன் (வயது - 34) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பிரதான சந்தேகநபராவார். நாட்டில் இடம்பெற்ற சில படுகொலைச் சம்பவங்களில் அவருக்குத் தொடர்புள்ளது என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

பிரதான சந்தேகநபருக்கு உதவிசெய்த யுவதியும் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-44)

### சட்டப்...

சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்ததாவது:-

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி மிகவும் சூட்சுமமான முறையில் நீதிமன்றத்துக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதன்படி, சட்டப் புத்தகத்தை துப்பாக்கியின் அச்சுக்கு ஏற்ப வெட்டி, அதற்குள் துப்பாக்கியை வைத்தே அது நீதிமன்றத்துக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்செயலில் பெண்ணொருவருக்கும் தொடர்புள்ளது. அந்தப் பெண்ணே தாக்குதலுக்கான துப்பாக்கியை நீதிமன்றத்துக்குள் கொண்டு சென்று, அதைப் பின்னர் பிரதான சந்தேகநபரிடம் கொடுத்துள்ளார். நீதிமன்றக் கூண்டில் இருந்த கனேமுல்ல சஞ்சீவ, இறங்க முற்பட்ட வேளையிலேயே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் ஐந்து பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும் ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர் - என்றார். (அ-ம-44)

### சட்டத்தரணிகளுக்கு...

படுவார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதுக்கடை நீதிமன்றத்தில் இன்று (நேற்று) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட சந்தேகநபர்கள் சட்டத்தரணிகள் போன்று வேடமிட்டே நீதிமன்றத்துக்குள் சென்றுள்ளனர். சட்டத்தரணிகள் நீதிமன்ற வளாகத்துக்குள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தியே மேற்படி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. ஆதலால், எதிர்காலத்தில் சட்டத்தரணிகளை பரிசோதனைக்கு உட்படுத்துவது தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழு மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்துடன் கலந்துரையாடப்படும். துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் வெளிநாட்டுக்கு தப்பிச்செல்லாமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-44)

### கிளிநொச்சியில்...

கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்று 8ஆவது வருடத்தை நிறைவு செய்கின்றது. இதைமுன்னிட்டும், காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக நாளை (இன்று) காலை 10 மணிமுதல் சிறப்புக் கவனவீர்ப்பு இடம்பெறவுள்ளது.

இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் தொடர்ச்சியாக எம்மை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றன. எனவே, இந்த ஏமாற்றங்களுக்கு ஒரு முடிவு கிடைக்கும் வகையில், பெருமளவான மக்கள் எமது போராட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும்.

எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றும், நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும்தான் நாங்கள் போராடுகின்றோம். ஆனால், தற்போதைய அரசாங்கத்திலும் இழப்பீடுகள் தொடர்பிலேயே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருகின்றன. இழப்பீடுதான் தேவையென்றால் அதை நாங்கள் முன்னரேயே பெற்றிருப்போம், எமக்குத் தேவை நீதி மட்டுமே. அதை நாம் மீண்டும் மீண்டும் அழுத்தமாக வலியுறுத்துகின்றோம்.

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கிடைப்பதற்கு சர்வதேசம் உதவ வேண்டும். ஆனால், சர்வதேசம் தொடர்ச்சியாகப் பாராமுகமாகச் செயற்படுகின்றது. இது வேதனையானது - என்றனர். (அ-ம-20-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண அபிவிருத்திகளை இந்தியாவின் பொறுப்பாக்கிய அரசு

## வெட்கக்கேடானது என நிசாம் காரியப்பர் கொதிப்பு

கொழும்பு, பெப்.20
கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை அரசாங்கம் இந்தியாவின் பொறுப்பாக்கியுள்ளது. இது வெட்கக்கேடானது. அவ்வாறாயின் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் அனைவரும் இந்தியத் தூதுவரை சந்தித்தே பிரச்சினைகளைக் கூற வேண்டும். இந்த வரவு - செலவுத் திட்டத்தை தூக்கியெறிய வேண்டும். இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வரவு - செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு முன்வைக்கப்படவில்லை.

கிழக்கு மாகாணத்தில் அருகம்பை, பொதுத்துவில், பாசிக்குடா மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகள் பிரதான சுற்றுலாத் தலங்களாக உள்ளன. இந்தப் பகுதிகள் ஊடாக அதிகளவில் வெளிநாட்டு வருவாயைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அதற்கான எந்தத் திட்டங்களும் வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் புகையிரத சேவையை மேம்படுத்த எந்தத் திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை-என்றார். (எ-இ)

# யாழ். பொதுநூலகத்தை டிஜிற்றல் மயப்படுத்துக

## ஈ.பி.டி.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ். நூலகம் டிஜிற்றல் மயப்படுத்தப்பட வேண்டும் எனவும், வெற்றிடங்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப அரச வேலை வாய்ப்புகள் வடக்கு கிழக்குக்கு கிடைப்பதை உறுதி செய்யவேண்டும் எனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய வரவு செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள், வெறுமனே எழுத்தில் மட்டும் இல்லாமல், செயலிலும் அமைய வேண்டும். குறிப்பாக வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள நிதிகள் சீரான முறையில் ஒதுக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ச-25, 27)






கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வு அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் கலந்து சிறப்பித்தார். (ச-41-17)

விற்பனைக்கு
கட்டட இடிபாடுகள், கேற், தீராந்திகள் விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 077 723 2535

நல்லூரில் காணி விற்பனைக்கு
நல்லூர் வைமன் வீதியில்
1 1/2 பரப்புக் காணி
கிணற்றுடன்
விற்பனைக்குண்டு.
077 981 4551

## மரண அறிவித்தல்



தோற்றம்
09 . 09 . 1950

மறைவு
16 . 02 . 2025

### கந்தையா இலட்சுமிகாந்தன்

தொல்புரம் மேற்கைப் பிறப்பிடமாகவும், அரோ, சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இலட்சுமிகாந்தன் அவர்கள் கடந்த (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை குரும்பசிட்டி கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தையல்முத்து தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ராஜேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் சுகாந் (லண்டன்), அனந் (லண்டன்), றஜீந் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனுஜா, ஜெயபிரபா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தெட்சணாமூர்த்தி, பாலசுப்பிரமணியம், தனபாக்கியம், குணபாக்கியம், இரத்தினசபாபதி, வரதராசா மற்றும் கணேசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அனோஜன், கரிஷ், அனிஷ், அஷ்விகா, நியான், சைரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2025) வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் குரும்பசிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
மனைவி-திருமதி ராஜேஸ்வரி (ராஜேஸ்)-076 790 7013
மகன்மார்
சுகாந்-0044 7791258187, ஆனந் - 0044 742 6864898
றஜிந்-0041 768192119

## இலங்கைக் கடற்படைக்கு எதிராக

# தமிழகத்தில் கடையடைப்பு



சென்னை, பெப்.20
இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியமைக்குக் கண்டனம் தெரிவித்து தமிழகத்தின் புதுச்சேரி, காரைக்கால் பகுதி மீனவர்களால் நேற்றுமுன்தினம் கடையடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை கடற்படையினரின் செயற்பாடுகள், தமிழ்நாட்டு மீனவர்களைக் காக்கத் தவறிய இந்திய மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகள் என்பவற்றைக் கண்டித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களும் அவர்களது குடும்பத்தினரும், காரைக்கால் ரயில் நிலையத்தில் வேளாங்கண்ணிக்குச் செல்லும் ரயில் முன்பு தண்டவாளத்தில் படுத்துப் போராட்டம் நடத்தியதால் அங்கு பதற்றமான சூழலும் ஏற்பட்டிருந்தது. (எ-இ)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 20.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org